ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

# நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு)

(மலர்- 32) Oct (1) / 2008



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு

## உட்பொதிவு


1. ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் (ஸ்வாமி பராசரபட்டர் பாஷ்யம்)…………………......3

2. ஸ்ரீபாஷ்யம் ……………………………………………………………………......9

3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் ……………………………………………………..11

4. முமுக்ஷுப்படி ……………………………………………………………………15

5. திருக்குறுந்தாண்டகம்………………………...…………………………………….21

6. திருமாலை ………………………………………………………………………..27

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்த

# ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்

(பகுதி – 9)

## பரம்பொருளே நிமித்த காரணம்

இனி யுதிஷ்டிரனின் முதல் கேள்விக்கான பதில் அளிக்கப்படுகிறது. அடுத்து உள்ள 1 ½ ச்லோகம் மூலம் (10-2, 11) - எது மட்டுமே தெய்வம்? என்ற கேள்விக்கு விடையளிக்கப் படுகிறது.

10-2. தைவதம் தேவதாநாஞ்ச பூதாநாம் யோ அவ்யய: பிதா
11. யதஸ் ஸர்வாணி பூதாநி பவந்த்யாதி யுகாகமே
யஸ்மிம்ச்ச ப்ரளயம் யாந்தி புநரேவ யுகக்ஷயே.

அவன் மட்டுமே உயர்ந்த தெய்வம் ஆவான். சிவன், ப்ரம்மன் போன்றவர்களை விட உயர்ந்த தெய்வமாக உள்ளான். ஏன்? காரணம் - அனைத்து உயிர்களுக்கும் அவனே தந்தையாக உள்ளான். இவனது அழியாத தன்மை என்பது இவனை மற்றவைகளிடம் இருந்து வேறுபடுத்துகிறது. மிகவும் புராதானமானவனாக இவன் உள்ளதால், இந்த உலகில் உள்ள எதுவுமே அநாதை என்று கூற இயலாது எனப்பட்டது.

இவனே அனைத்திற்கும் தந்தை என்பது விளக்கப்பட உள்ளது.

**யதா** - யாரிடம் இருந்து - என்பதன் மூலம் இவனே நிமித்த காரணமக உள்ளான் என்பது விளங்குகிறது (பானைக்கு நிமித்த காரணம் = குயவன், மண் = உபாதான காரணம், சக்கரம் நீர் = ஸஹகாரி காரணம்). யாருக்கு நிமித்த காரணமாக உள்ளான் என்றால்?

**ஸர்வாணி** – ப்ரம்மன் தொடங்கி, மரம் வரை உள்ள அனைத்திற்கும் இவனே நிமித்த காரணமாக உள்ளான். எப்போதிலிருந்து நிமித்த காரணமாக உள்ளான்?

**ஆதி யுகாகமே** – முதல் யுகம் தொடங்கி. இதன் மூலம் ப்ரம்மனுக்கு முன்பாக இருந்த காலத்திற்கும், ப்ரம்மன் அனைத்தையும் படைத்த காலத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு உணர்த்தப்படுகிறது.

## பரம்பொருளே உபாதாநக் காரணம்

அனைத்தும் இறுதியில் சென்று லயிக்கின்ற உபாதானக் காரணமாக இவனே உள்ளான். இதன் மூலமாக, எந்த ஒரு பொருளும் அதன் உபாதானக் காரணத்திலேயே சென்று லயித்துவிடும் என்று விளங்குகிறது. இது, சிலந்தியின் நூலானது அந்தச் சிலந்திக்குள்ளேயே இழுக்கப்படுவது போலாகும். ச்லோகத்தில் உள்ள "ச" என்ற பதம் இவனே ஸஹகாரி காரணமாகவும் உள்ளான் என்பதையும், அனைத்து உயிர்களின் செயல்பாட்டிற்குக் காரணமாக உள்ளான் என்பதையும் குறிக்கிறது. எம்பெருமான் இத்தகைய தன்மைகளை கொண்டுள்ளான் என்பதை வேதங்களில் காணலாம்.

- தைத்திரீய உபநிஷத் - யதோ வா இமாநி – எதிலிருந்து இவை அனைத்தும் வெளிப்பட்டனவோ – என்று கூறியது.
- ப்ரஹ்மசூத்திரம் (1-1-2) – ஜந்மாத்யஸ்ய யத: - எதிலிருந்து இவை தோன்றினவோ - என்று கூறியது.

ப்ரஹ்மமே நிமித்த காரணம், உபாதாநக் காரணம் மற்றும் ஸஹாகாரி காரணம் என்பதை வேதத்தில் உள்ள உதாரணம் மூலம் காணலாம். இந்த வரியானது – ப்ரஹ்ம வநம் ப்ரஹ்ம ஸ வ்ருக்ஷ ஆஸீத் – ப்ரஹ்மமே காடு, அந்த ப்ரஹ்மமே மரம் – என்பதாகும். இந்தக் கருத்தை - ப்ரஹ்ம சூத்திரம் (1-4-23) – ப்ரக்ருதிச்ச ப்ரதிஜ்ஞான த்ருஷ்டாந்தாநுபரோதாத் - ப்ரஹ்மமே உபாதானக் காரணம் என்பதில் எந்த முரண்பாடும் இல்லை, இதற்கு உதாரணங்கள் பல உள்ளன - என்றது.

எம்பெருமான் உபாதாநக் காரணம், ருத்திரன் நிமித்த காரணம் என்று சிலர் வாதிடுகின்றனர். இந்தக் கருத்து வேதங்களில் ப்ரமாணம் இல்லாத ஒன்றாகும். மேலும் ஒரு சிலர் ப்ரஹ்மம் உபாதாநக் காரணம் என்றால், மாறுபாடு அடைதல் முதலான தோஷங்களுக்கு ப்ரஹ்மம் இலக்காகிவிடுமே என்று வாதாடலாம்.

இதற்கான சமாதாநம் – இப்படிப்பட்ட மாறுதல்கள் அனைத்தும் அவனுடைய சரீரமாக உள்ள ப்ரக்ருதி மற்றும் ஆத்மாக்களுக்கு மட்டுமே என்பதை அறிய வேண்டும். இதனை விளக்கவே வேதத்தின் சிலந்தி உதாரணம் கூறப்பட்டது (நூல், பஞ்சு போன்ற எந்தவிதமான பொருள்களும் இல்லாமல் சிலந்தி எவ்விதம் தனது வலையைப் பின்னுகிறதோ அது போன்று எம்பெருமானும் எந்தவிதமான உதவிகளும் இன்றி அனைத்தையும் படைக்கிறான். இதனை முண்டக உபநிஷத் 1-1-7 தெளிவாகக் கூறுகிறது).

யுதிஷ்டிரன் பீஷ்மரிடம், "யோ தைவதம்" - எது உயர்ந்த தெய்வம் - என்று கேட்டவுடன், பீஷ்மர் நேரடியாக "விஷ்ணு" என்று பதில் அளித்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு கூறாமல் பீஷ்மர், "ய:" என்று பதில் அளிக்கத் தொடங்கினார். இதன் மூலம், சாஸ்திரங்களில் விஷ்ணுவே உயர்ந்த தெய்வம் என்று கூறப்படுவதை யுதிஷ்டிரர் முன்பே அறிந்திருந்தார் என்று உணரலாம். எம்பெருமானின் பரதத்த்வம், லக்ஷணம், உபாஸனை முறைகள் ஆகிய பலவும் கூறப்பட்டுள்ள உபநிஷத்துக்களில், அவனை அடையும் உபாயமும் கூறப்பட்டுள்ளது. ஸத், அஸத், ப்ரஹ்ம, அக்ஷர முதலான பதங்கள் ப்ரஹ்மத்தைக் கூறுவதாக உள்ளன. சில இடங்களில் இந்தப் பதங்களில், "பரம் – உயர்ந்த" என்பதும் கூறப்படுகின்றன. வேதங்களில் நான்முகன், விஷ்ணு, சிவன் முதலானவர்கள் பற்றி நேரடியாகக் கூறப்பட்டுள்ளதா என்ற கேள்வி எழலாம். இதற்கான விடைகள் கீழே உள்ள வரிகளில் காணலாம். இந்த வரிகள் மூலம் வேறு எந்தவிதமான ஐயமும் ஏற்பட அவசியம் இல்லை என்றாகிறது.

- நாராயண ஸூக்தம் – நாராயணபரம் ப்ரஹ்ம தத்வம் நாராயண: பர: - நாராயணனே பரப்ரஹ்மம், நாராயணனே மிகவும் உயர்ந்தவன்.

- கட உபநிஷத் – தத் விஷ்ணோ : பரமம் பதம் - விஷ்ணுவின் உயர்ந்த இடம்.

- ஸ்வேதாஸ்வதர உபநிஷத் - யஸ்மாத் பரம் ந அபரம் அஸ்தி கிஞ்சித் - விஷ்ணுவின் இடத்தை விட உயர்ந்த இடம் இல்லை.

- கட உபநிஷத் - புருஷாந்ந பரம் கிஞ்சித் – அவனை விட உயர்ந்த புருஷன் இல்லை.

- ஸ்ரீமத் பகவத் கீதை (7-7) - மத்த: பரதரம் ந அந்யத் கிஞ்சித் – என்னை விட வேறு எதுவும் உயர்ந்தது இல்லை.

- ஸ்ரீமத் பகவத் கீதை(15-17) - உத்தம: புருஷஸ்து அந்ய: - இவர்களில் வேறுபட்ட ஒருவனே பரம புருஷன்.

அறிவுள்ள ஒருவன் கீழே கூறப்பட்டுள்ள காரணங்களால் மஹாவிஷ்ணுவே உயர்ந்த தெய்வம் என்றும், வேறு ஈடு இல்லாத தலைவன் என்றும், மற்ற யாரும் இவனை விட உயர்ந்தவர்கள் இல்லை என்றும் உணரலாம்:

1. ஸ்ருஷ்டி குறித்து கூறப்பட்டுள்ள வேதவரிகளில் ஒற்றுமை உள்ளது.
2. புருஷஸூக்தம் மற்றும் உத்தர நாராயணஸூக்தம் முதலானவற்றில் உள்ள உண்மைகள்.
3. ஸுபால, மைத்ராவர்ருணீய, மஹோபநிஷத், சாந்தோக்யம், தைத்திரீயம், ஐதரேயம் மற்றும் கட உபநிஷத்துகளில் கூறப்பட்டுள்ள உண்மைகள்.
4. பரமாத்மாவைப் பற்றி நன்கு அறிந்து ரிஷிகளான பராசரர், வால்மீகி மற்றும் வ்யாசர் ஆகியவர்களின் கருத்துக்கள்.
5. இதிகாசங்களிலும், ஸாத்வீக புராணங்களிலும் கூறப்பட்டுள்ள கருத்துக்கள்.
6. வேதங்களை ஒட்டியே அமைந்துள்ள கருத்துக்கள்.
7. இயற்கையாகவே மேன்மையுடன் விளங்கும் அவனது ரூபம், ஆயுதங்கள், வாகனங்கள் மற்றும் சரிதங்கள்.

நமது ஆசார்யர்கள் மேலே உள்ள கருத்துக்கள் கொண்டிருந்தனர் என்பது அவர்களது தஹரா, வைஷ்வாநரம் மற்றும் ப்ரஹ்மசூத்திரத்தின் சமந்வய அத்யாயம் போன்றவற்றுக்கான பல வ்யாக்யானங்களில் இருந்து அறிந்து கொள்ளலாம். கீழே உள்ள பல வரிகள் காண்க:

- ஸ்தோத்ர ரத்னம் (15) - த்வாம் சீல ரூப சரிதை: பரமப்ரக்ருஷ்ட ஸத்த்வேந ஸாத்விக தயா ப்ரபலைச்ச சாஸ்த்ரை: ப்ரக்யாத தைவ பரமார்த்த விதாம் மதைச்ச நைவாஸுர ப்ரக்ருதய: ப்ரபவந்தி போத்தும் - மனிதத் தன்மையை கடந்த இனிமையான செயல்களையும், வடிவத்தையும், மேலான ஸத்வ குணத்தையும் கொண்டவனே! மயக்கம் இல்லாத சாஸ்திரங்களை நன்றாக உணர்ந்தவர்கள் கூறுகின்ற வாக்கு, சமயம் போன்றவற்றால் உண்மை என்று போற்றப்படும் புகழ் பெற்றவனே! அசுரத்தன்மை கொண்டவர்கள் உன்னை அறிய இயலாதவர்கள் ஆவர்.

- ஸ்ரீ வைகுண்ட ஸ்த்வம் (17) – தத்வார்த்த தத்பர பரச்சதவேத வாக்யை: ஸாமர்த்யத: ஸ்ம்ருதிபிரப்யத தாத்ருசீபி: த்வாமேவ தத்வபர ஸாத்விகஸத்புராணை: தேவஜ்ஞதீபிரபி நிச்சிநும: பரேசம் - சரியான காரணங்கள் மூலம் உண்மையானவற்றை மட்டுமே கூறுகின்ற

நூற்றுக்கணக்கான வேதங்கள் மூலமாகவும், ஸ்ம்ருதிகள் மூலமாகவும் ஸாத்வீக புராணங்கள் மூலமாகவும் நீயே பரம்பொருள் என்பதை நாங்கள் ஐயம் இன்றி ஏற்றுக் கொள்கிறோம்.

- ஸ்ரீ வைகுண்ட ஸ்தவம் (28) – ரூபச்ரியா பரமயா பரமேண தாம்நா சித்ரைச்ச கைச்சிதுசிதைர் பவதச் சரித்ரை: சிஹ்நைர நிஹ்நவபரை ரபரைச்ச கைச்சித் நிச்சிந்வதே த்வயி விபச்சித ஈசித்ருத்வம் - நீயே பரம்பொருள் என்று உன்னுடைய திருமேனியின் அழகைக் கொண்டே அறிஞர்கள் கூறுகின்றனர். மேலும் இவர்கள் உன்னுடைய ஜோதி ஸ்வரூபம், இனிமையான நேர்த்தியான சரிதங்கள் போன்றவை மூலமும் இப்படியாக முடிவு செய்கின்றனர்.

இப்படியாக உயர்ந்த தத்துவமும், அடையக்கூடிய சரியான மார்க்கமும் மற்ற அனைத்தையும் விட உயர்ந்தது என்று கூறப்பட்டது. இதில் அனைவருக்கும் பொதுவாக உள்ளதும், நன்மை அளிக்கவல்லதும் ஆகிய ஓர் உபாயத்தைக் கூறவேண்டும். ஆகவே யுதிஷ்டிரனை தொடர்ந்து கேட்கும்படி பீஷ்மர் கூறுகிறார்.

12. தஸ்ய லோக ப்ரதாநஸ்ய ஜகந்நாதஸ்ய பூபதே
விஷ்ணோர் நாம ஸஹஸ்ரம் மே ச்ருணு பாப பயாபஹம்.

- **தஸ்ய** – அனைத்திற்கும் எஜமானனாக உள்ளவனைப் பற்றி.

- **லோக ப்ரதாநஸ்ய** – வேறு எந்தவிதமான இலக்கும் இன்றி, அனைத்தும் சார்ந்துள்ள ஸர்வேச்வரன்

- **ஜகந்நாதஸ்ய** – அனைத்தையும் நியமிப்பவன்.

- **விஷ்ணு நாம ஸஹஸ்ரம்** – மஹாவிஷ்ணுவை மகிழ வைத்து, அதன் மூலம் பாவங்களைப் போக்கிக் கொள்ள எண்ணற்ற வழிகள் உள்ளன. அவற்றில் ஆயிரம் நாமங்களைக் கொண்ட இதுவே உன்னதமான வழியாகும்.

- **மே** - என்னிடமிருந்து, எனக்காக.

- **ச்ருணு பூபதே** – முன்பே கேட்டுக் கொண்டிருந்த யுதிஷ்டிரனைப் பார்த்து, ”மீண்டும் கேட்பாயாக”, என்று ஏன் கூறவேண்டும்? இதன் மூலம்,

இதனைக் கேட்பதால் கேட்பவனுக்கு இந்த விஷயம் மிகவும் முக்கியமானது என்று பீஷ்மர் உணர்த்துகின்றார்.

...தொடரும்

அழகியமணவாளன் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பராசரபட்டர் திருவடிகளே தஞ்சம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

பகவத் ராமானுஜர் அருளிச் செய்த

# ஸ்ரீபாஷ்யம்

(பகுதி – 32)

3-3-40 உபஸ்திதே அத: தத்வசநாத்

**பொருள்** - ப்ரஹ்மத்தை அடைந்தவன் என்பதே காரணமாக, பித்ருலோகம் செல்வதாகக் கூறுகையால்.

**ஸித்தாந்தம்** (கடந்த சூத்திரத்தில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) - உபஸ்திதி என்றால் உபஸ்தானம் அடைதல். அனைத்து விதமான பந்தங்களும் நீங்கப் பெற்ற ஆத்மா, தனது ஸ்வரூபம் அடையப் பெற்று, ப்ரஹ்மத்தை அடைகிறது. இந்தக் காரணத்தால்தான் ப்ரஹ்மத்தை அடைதல், எங்கும் ஸஞ்சாரம் செய்தல் போன்றவை கூறப்பட்டது. இதனைக் கீழே உள்ள வரிகளில் காணலாம்:

- சாந்தோக்ய உபநிஷத் (8-12-3) – பரம் ஜ்யோதி ருப ஸம்பத்ய ஸ்வேந ரூபேண அபிநிஷ்யத்யதே ஸ உத்தம: புருஷ: ஸ தத்ர பர்யேதி ஜக்ஷத் க்ரீடந் ரமமாண: ஸ்த்ரீபிர்வா யாநைர்வா ஜ்ஞாநிபிர்வா நோபஜந ஸ்மரரந் இதம் சரீரம் – உயர்ந்த ஜோதியை அடைந்து ஜீவன் தனது ஸ்வரூபத்தை அடைகிறான். இப்படியாக அடையப்பட்ட இந்தப் பரஞ்ஜோதியானது பரமபுருஷன் ஆவான். அவன் மூலமாக அனைத்தையும் அனுபவித்தபடியும் பெண்கள், வாகனங்கள், பித்ருக்கள் ஆகியோருடன் பலவிதமான இன்பங்கள் அனுபவித்தபடியும், எங்கும் ஸஞ்சாரம் செய்தபடியும் உள்ளான். தனது இந்தப் பிறவியை ஞாபகம் வைக்காதபடி உள்ளான்.

- சாந்தோக்ய உபநிஷத் (7-25-2) – ஸ ஸ்வராட் பவதி தஸ்ய ஸர்வேஷு லோகேஷு காமசாரோ பவதி - தனது ஆத்மாவிற்கு ஈச்வரனாக, எங்கும் சுதந்திரமாக ஸஞ்சாரம் செய்பவனாக.

இது போன்று ஸஞ்சாரம் செய்தல் முதலானவை பற்றி மிகவும் விரிவாக நான்காம் அத்யாயத்தில் கூறப்பட உள்ளது. எனவே அனைத்தும் உலகங்களிலும் ஸஞ்சாரம்

என்பது முக்தி பெற்ற ஜீவன் அனுபவிக்கின்ற பலன் அல்லாமல், ஸம்ஸாரத்தில் உள்ளவனின் பலன் அல்ல என்று உணரலாம். இதனால் ஸத்யகாமத்வம் போன்ற தன்மைகள் மோக்ஷத்தை விரும்பும் உபாஸகன் ஒருவனால், அந்தந்த உபாஸனங்களில் த்யானிக்கத் தக்கவை என்றாகிறது.

காமாத்யதிகரணம் ஸம்பூர்ணம்

தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 32)

## 11. பரிகரவிபாகாதிகாரம்

(ப்ரபத்தியின் அங்கங்களைக் கூறுதல்)

இயாந் இத்தம்பூத: ஸக்ருத் அயம் அவச்யம்பவநவாந்
தயா திவ்ய அம்போதௌ ஜகத் அகிலம் அந்த: யமயதி
பவ த்வம்ஸ உத்யுக்தே பகவதி பரந்யாஸ வபுஷ:
பரபத்தே: ஆதிஷ்ட: பரிகர விசேஷ: ச்ருதிமுகை:

**பொருள்** – கருணைக் கடலாக உள்ளவன், அனைத்து உலகங்களையும், அவற்றின் ஆத்மாவாக இருந்து நியமிப்பவன், ஸம்ஸாரத்தை அழிப்பதற்கு எப்போதும் ஆயத்தமாக உள்ளவன் ஸர்வேச்வரன் ஆவான். இப்படிப்பட்ட அவனிடம் அனைத்துவிதமான பொறுப்புகளையும் ஸமர்ப்பணம் செய்வதையே ஸ்வரூபமாகக் கொண்டது ப்ரபத்தி ஆகும். ப்ரபத்தியின் அங்கங்கள் குறித்து வேதங்கள் - அங்கங்கள் இன்னவை என்றும், இத்தனை என்றும், அங்கங்களின் ஸ்வரூபம் இவை என்றும், அங்கங்களின் பயன் இவை என்றும், ஒருமுறை ப்ரபத்தி இயற்றப்படும்போது இந்தந்த அங்கங்கள் இருக்கவேண்டும் என்றும் – விதித்துள்ளன.

### ப்ரபத்தியின் அங்கங்கள்

**மூலம்** - இவ்வித்யைக்குப் பரிகரமாவது ஆநுகூல்யஸங்கல்பமும், ப்ரதிகூல்யவர்ஜனமும், கார்பண்யமும், மஹாவிச்வாஸமும், கோப்த்ருத்வவரணமும்.

**விளக்கம்** – ப்ரபத்தி அல்லது ந்யாஸவித்யை எனப்படும் இந்த வித்யைக்குக் கீழே உள்ள பலவும் அங்கங்கள் ஆகும் – எம்பெருமானுக்கு ஏற்புடையவற்றை மட்டுமே

செய்தல், அவனுக்கு விருப்பம் இல்லாதவற்றைத் தவிர்த்தல், உதவியற்று இருத்தல், மஹாவிச்வாஸம் மற்றும் அவனது ரக்ஷகத்தை விண்ணப்பித்தல்.

**மூலம்** – இவ்விடத்தில்

ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ரதிகூல்யஸ்ய வர்ஜநம்
ரக்ஷிப்யதீதி விச்வாஸோ கோப்த்ருத்வவரணம் ததா
ஆத்மநிக்ஷேப கார்ப்பண்யே ஷட்விதா சரணாகதி:

இத்யாதிகளிற் சொல்லுகிற ஷாட்வித்யமும் அஷ்டாங்கயோகமென்னுமாப்போலே அங்க அங்கி ஸமுச்சயத்தாலே ஆகக்கடவதென்னுமிடமும், இவற்றில் இன்னது ஒன்றுமே அங்கி, இதரங்கள் அங்கங்களென்னுமிடமும்,

நிக்ஷேபாபரபர்யாயோ ந்யாஸ: பஞ்சாங்க ஸம்யுத:
ஸந்ந்யாஸஸ்த்யாக இத்யுக்த: சரணாகதிரித்யபி

என்கிற ச்லோகத்தாலே ந்யாய நிரபேக்ஷமாக ஸித்தம்.

**விளக்கம்** – அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை சரணாகதி என்பது ஆறு வகை என்பதை - ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ரதிகூல்யஸ்ய வர்ஜநம் ரக்ஷிப்யதீதி விச்வாஸோ கோப்த்ருத்வவரணம் ததா ஆத்மநிக்ஷேப கார்ப்பண்யே ஷட்விதா சரணாகதி: - அவனுக்கு மகிழ்வை உண்டாக்குவதை மட்டுமே செய்வேன் என்ற எண்ணம், அவனுக்கு விருப்பம் இல்லாதவற்றை கைவிடுதல், அவன் எப்போதும் காப்பான் என்ற திடமான நம்பிக்கை, ரக்ஷிக்க வேண்டும் என்று விண்ணப்பம் செய்தல், ஆத்ம ஸ்வரூபத்தை ஸமர்ப்பணம் செய்தல், வேறு கதியற்றவன் என்ற எண்ணம் – என்று கூறியது. அஷ்டாங்க யோகத்தில் அங்கியான ஸமாதி நிலையையும் சேர்த்து எட்டு என்பது போன்று, இங்கு அங்கியான ப்ரபத்தியையும் சேர்த்து ஆறு வகை என்பது காண்க (அதாவது – அஷ்டாங்க யோகம் என்பது யமம், நியமம், ஆசனம், ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம், த்யானம், தாரணம் என்னும் ஏழு அங்கங்களுடன் அங்கியான ஸமாதியையும் சேர்த்து எட்டு எனப்படுகிறது. இது போன்று இங்கு சரணாகதி என்பது ஆநுகூல்யஸங்கல்பம், ப்ரதிகூல்யவர்ஜனம், கார்பண்யம், மஹாவிச்வாஸம், கோப்த்ருத்வவரணம் என்னும் ஐந்து அங்கங்களுடன் அங்கியான ஆத்மஸமர்ப்பணமும் சேர்த்து ஆறு எனப்படுகிறது). இந்த ஆறில் ஒன்று அங்கி என்றும், மற்ற ஐந்தும் அங்கங்கள் என்றும் லக்ஷ்மீ தந்த்ரம் (17-74) - நிக்ஷேபாபரபர்யாயோ ந்யாஸ: பஞ்சாங்க ஸம்யுத: ஸந்ந்யாஸஸ்த்யாக இத்யுக்த: சரணாகதிரித்யபி – ஐந்து அங்கங்களுடன் கூடிய ஸமர்ப்பணம் என்னும் ந்யாஸம்

என்பதே ஸந்ந்யாஸம் என்றும், த்யாகம் என்றும், சரணாகதி என்றும் கூறப்படுகிறது – என்று கூறியது.

**மூலம்** – இவ்விடத்தில்

சாச்வதீ மம ஸம்ஸித்திரியம் ப்ரஹ்மவிபவாமி யத்
புருஷம் பரமுதிச்ய ந மே ஸித்திரித: அந்யதா
இதியங்கமுதிதம் ச்ரேஷ்டம் பலேப்ஸா தத்விரோதிநீ

என்று அஹிர்புத்ந்யோக்தமான பலத்யாகரூப அங்காந்தரம் மோக்ஷார்த்தமான ஆத்மநிக்ஷேபத்திலே நியதம். பல ஸங்க கர்த்ருத்வாதி த்யாகம், கர்மயோகம் முதலாக நிவ்ருத்தி தர்மங்களெல்லாவற்றிலும் வருகையாலே இவ்வநுஸந்தாநம் முமுக்ஷுவுக்கு ஸாங்க ஸமர்ப்பண தசையிலே கர்த்தவ்யம்.

**விளக்கம்** – அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை - சாச்வதீ மம ஸம்ஸித்திரியம் ப்ரஹ்மவிபவாமி யத்
புருஷம் பரமுதிச்ய ந மே ஸித்திரித: அந்யதா இதியங்கமுதிதம் ச்ரேஷ்டம் பலேப்ஸா தத்விரோதிநீ – எம்பெருமானிடம் நான் செய்கின்ற ப்ரபத்தி என்பதே உயர்ந்த புருஷார்த்தம், இதனைத் தவிர வேறு எதுவும் எனக்குப் பயனாக நான் விரும்பவில்லை, இப்படியாக வேறு எதனையும் விரும்பாமல் உள்ளதே சிறந்த அங்கமாகக் கூறப்படுகிறது, இதற்கு விரோதியாக பலன் மீது கொள்ளும் ஆசை உள்ளது – என்றது. மோக்ஷத்தை அடையும் பொருட்டு ஆத்ம ஸமர்ப்பணம் செய்தல் என்னும் சரணாகதிக்கு, மற்ற பலன்களின் மீது உள்ள பற்றுதல்களைத் தவிர்த்தல் என்பது, அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை கூறுவது போன்று, மிகவும் முக்கியமான அங்கம் ஆகும். பலன்களின் மீது உள்ள பற்றுதல்களைக் கைவிடுதல், கர்மங்களைத் தானே இயற்றுதல் என்ற எண்ணத்தைக் கைவிடுதல் முதலானவை கர்மயோகம் போன்றவற்றில் துறப்பது என்றாகிறது. இதே எண்ணங்கள், மோக்ஷத்தை விரும்பி, எம்பெருமானிடம் அனைத்து அங்கங்களுடன் சரணாகதி செய்யும்போது இருத்தல்வேண்டும்.

## ஆநுகூல்ய ஸங்கல்பம், ப்ரதிகூல்ய வர்ஜநம்

**மூலம்** – இங்குப் பரிகரங்களானவற்றில் ஆநுகூல்ய ஸங்கல்பத்துக்கும் ப்ரதிகூல்ய வர்ஜநத்துக்கும் நிபந்தனம், ஸர்வசேஷியான ஸ்ரீய:பதியைப் பற்றப் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளாலே அபிமதாநுவர்த்தனம் பண்ணவேண்டும்படி இவனுக்கு

உண்டான பாரார்த்ய ஜ்ஞாநம். இத்தாலே ஆநுகூல்யேதராப்யாம் து விநிவ்ருத்திரபாயத: என்கிறபடியே அபாய பரிஹாரம் ஸித்தம்.

**விளக்கம்** – ப்ரபத்தியின் அங்கங்களில் எம்பெருமானுக்கு மகிழ்வை உண்டாக்கும் செயல்களை மட்டுமே செய்தல், அவனுக்கு விருப்பம் இல்லாத செயல்களைக் கைவிடுதல் என்பது காண்க. இதன் மூலம் மஹாலக்ஷ்மியின் நாயகனான எம்பெருமானுக்காகவே அனைத்து உயிர்களும் உள்ளன என்னும் ஞானம் பிறக்கிறது (சேஷத்வ ஞானம்). ஆகவே எத்தகைய செயல்களைச் செய்தால் அவன் மகிழ்வானோ, எதனைக் கைவிட்டால் அவன் மகிழ்வானோ அவற்றை மட்டுமே கடைபிடிக்க வேண்டும். லக்ஷ்மீதந்த்ரம் (17-76) - ஆநுகூல்யேதராப்யாம் து விநிவ்ருத்திரபாயத: என்கிறபடியே அபாய பரிஹாரம் – அவனுக்கு விருப்பமானவற்றைச் செய்தல், அவனுக்கு விருப்பம் இல்லாதவற்றைத் துறத்தல் என்பதன் மூலம் அவனது ஆணைகளை மீறாமல் இருக்கும் நிலை உண்டாகிறது – என்று கூறியது.

## கார்ப்பண்யம்

**மூலம்** – கார்ப்பண்யமாவது முன்பு சொன்ன ஆகிஞ்சந்யாதிகளுடைய அநுஸந்தானமாதல், அதடியாக வந்த கர்வஹாநியாதல், க்ருபாஜநக க்ருபணவ்ருத்தியாதலாய் நின்று சரண்யனுடைய காருண்யோத்தம்பநார்த்தமுமாய், கார்ப்பண்யேநாப்யுபாயாநாம் விநிவ்ருத்திரிஹேரிதா என்கிறபடியே பின்பும் அநந்யோபாயதைக்கும் உபயுக்தமாயிருக்கும்.

**விளக்கம்** – கார்ப்பண்யம் என்றால் முன்பு கூறப்பட்ட ஆகிஞ்சந்யம் முதலானவற்றைக் குறித்து எண்ணியபடி இருத்தல், இந்த எண்ணங்கள் மூலமாகத் தனது கர்வம் நீங்குதல் என்பதாகும். இதன் மூலமாக தான் எந்தவிதமான உதவியும் அற்று (கதியும் அற்று) உள்ளோம் என்னும் எண்ணம் தோன்றும். இதன் மூலமாகத் தஞ்சம் புகுகின்ற எம்பெருமானின் கருணையானது பல மடங்கு பெருகுகிறது. இதன் மூலமாக வேறு எந்தவிதமான உபாயமும் இல்லை என்ற ஞானம் ஓங்குகிறது. லக்ஷ்மீதந்த்ரம் (17-77) - கார்ப்பண்யேநாப்யுபாயாநாம் விநிவ்ருத்திரிஹேரிதா – மற்ற உபாயங்களை நாடாமல் உள்ளதே கார்ப்பண்யம் – என்றது காண்க.

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த

# முமுக்ஷுப்படி

## ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்

(பகுதி – 32)

## சரம ச்லோக ப்ரகரணம்
## வ்யாக்யாந அவதாரிகை

**வ்யாக்யானம் -** மத்யமரஹஸ்யமான த்வயத்தினுடைய அர்த்தத்தை அருளிச் செய்த அநந்தரம் அதில் பூர்வ வாக்யத்திற் சொல்லுகிற உபாயவரணம் ஸர்வேச்வரன் தானே விதிக்கையாலே ததபிமதமென்னுமத்தையும், வரணாங்கமான ஸாதாநாந்தர பரித்யாகத்தையும், வரணத்தில் ஸாதநத்வ புத்திராஹித்யத்தையும் சாப்தமாகப் பூர்வார்த்தத்தாலே ப்ரதிபாதிக்கையாலும், உத்தரவாக்யத்தில் சொல்லுகிற கைங்கர்யத்துக்குப் பூர்வபாவியான ப்ராப்தி ப்ரதிபந்தக ஸகலபாப விமோசநத்தையும், உத்தரார்த்தத்தாலே சாப்தமாக ப்ரதிபாதிக்கையாலும், த்வயத்துக்கு விவரணமாய், பஞ்சம வேதஸாரபூத கீதோபநிஷத் தாத்பர்யமாய், சரம ரஹஸ்யமாய் இருந்துள்ள சரம ச்லோகத்தினுடைய அர்த்தத்தை ஸம்சய விபர்யயமற அருளிச் செய்கிறார்.

**விளக்கம் –** ரஹஸ்ய த்ரயத்தில் நடு ரஹஸ்யமான த்வயத்தை விளக்கிய பின், இறுதி ரஹஸ்யமான சரம ச்லோகத்தின் பொருளை அருளிச்செய்கிறார். சரம ச்லோகத்தின் முதல் வரி மூலமாக, த்வய மந்திரத்தின் முதல் பதம் மூலம் கூறப்பட்ட உபாயம் பற்றி, ஸர்வேச்வரன் தானே கூறுகிறான். முதல் வரி மூலமாக - இப்படிப்பட்ட உபாயம் எதற்காக என்றும், மற்ற உபாயங்களை கைவிடுதல் என்பது அதன் அங்கம் என்றும், இது ஒரு சாதனம் அல்ல என்றும் உணர்த்தப்படுகிறது. சரம ச்லோகத்தின் இரண்டாவது வரியானது மோக்ஷத்தைப் பெறுகின்ற நிலைக்குத் தடையாக உள்ள பாவங்கள் விலகுவது பற்றிக் கூறுகிறது. த்வயத்தில் உள்ள இரண்டாவது வரியின் மூலம் கூறப்படும் கைங்கர்யம் என்பதற்கு முன்பாக, இத்தகைய பாவம் நீங்குதல் என்பது நிகழ்கிறது. மேலும் சரம

ச்லோகம் என்பது கீதோபநிஷத்தின் ஸாரமாக உள்ளது. கீதோபநிஷத் என்பது ஐந்தாவது வேதமான மஹாபாரதத்தின் ஸாரமாக உள்ளது.

**வ்யாக்யானம்** - இதில் அர்த்தங்கேட்கைக்காகவிறே - எம்பெருமானார் பதினெட்டுப் பர்யாயம் திருக்கோட்டியூர் நம்பி பக்கல் எழுந்தருளிற்று. நம்பிதாமும் இதில் அர்த்தத்தினுடைய கௌரவத்தையும் இதுக்கு அதிகாரிகள் இல்லாமையும் பார்த்திறே இவருடைய ஆஸ்திக்யஆதா பரீக்ஷார்த்தமாகப் பலகால் நடந்து துவளப் பண்ணிச் சூளுரவு கொண்டு மாஸோபாவாஸங்கொண்டு அருமைப்படுத்தி அருளிச் செய்தருளிற்று.

**விளக்கம்** - இந்த சரம ச்லோகத்தின் பொருளை உணர்வதற்காக எம்பெருமானார் திருக்கோட்டியூர் நம்பியை பதினெட்டு முறைகள் சென்று விண்ணப்பித்து வந்தார். இந்த மந்திரத்தின் பொருளில் அடங்கிய மேன்மையை உணர்ந்திருந்த திருக்கோட்டியுர் நம்பி, இதனை அத்தனை எளிதாக கற்கவல்லவர்கள் மிகவும் குறைவே என்று அறிந்திருந்தார். ஆகவே அவர் எம்பெருமானாரின் நம்பிக்கையையும் உறுதியையும் சோதிக்க எண்ணினார். எனவே எம்பெருமானாரைப் பலமுறை நடக்க வைத்தும், ஒரு மாதம் உபவாசம் இருக்க வைத்தும் அவரைச் சோர்வடையும்படிச் செய்தார். அதன் பின்னரும் எம்பெருமானார் தளராது இருப்பது கண்டு மகிழ்ந்து, அவருக்குச் சரம ச்லோகத்தின் பொருளை உபதேசித்தார்.

**வ்யாக்யானம்** - நிஷ்க்ருஷ்ட ஸத்வநிஷ்டனாய், பரமாத்மநி ரக்தனாய், அபரமாத்மநி வைராக்யமுடையனாய், ப்ரமாண பரதந்த்ரனாய், பகவத் வைபவம் ச்ருதமானால் அது உபபந்நமென்னும்படியான விஸ்ரம்பபாஹுள்யமுடையனாய் ஆஸ்திக அக்ரேஸர னாயிருப்பான் ஒருவனுண்டாகில் அவன் இந்த ச்லோகார்த்த ச்ரவண அநுஷ்டாநத்துக்கு அதிகாரியாகையாலே, அதிகாரி துர்லபத்வத்தாலும் அர்த்த கௌரவத்தாலும் இத்தை வெளியிடாதே மறித்துக் கொண்டு போந்தார்கள் எம்பெருமானாருக்கு முன்புள்ளார். ஸம்ஸாரிகள் துர்க்கதி கண்டு பொறுக்கமாட்டாதபடி க்ருபை கரைபுரண்டிருக்கையாலே, அர்த்தத்தின் சீர்மை பாராதே அநர்த்தத்தையே பார்த்து வெளியிட்டருளினார் எம்பெருமானார்.

**விளக்கம்** - இந்த ச்லோகத்தின் பொருளை ஒருவன் அறிய வேண்டுமென்றால் அவன் கீழே உள்ள நிலையில் இருந்தல் வேண்டும்:

- தூய்மையான பக்தியில் நிலைத்தல்.
- எம்பெருமானிடம் மட்டுமே மகிழ்ச்சியுடன் இருத்தல்.
- அவனைத் தவிர்ந்த மற்றவற்றில் பற்றற்று இருத்தல்.
- வேதங்களைக் கடைப்பிடித்தல்.

- எம்பெருமானின் மேன்மைகளை கூறக்கேட்டால், அது உண்மையே என்று நம்புதல்.
- எம்பெருமானிடம் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருத்தல்.

மேலே உள்ள காரணங்களால் இந்த ச்லோகத்தின் பொருளை அறிந்து கொள்ளும் தகுதி பெற்ற ஒருவனைக் கண்டுபிடித்தல் மிகவும் கடினமாகும். மேலும் இதனுடைய மேன்மை எல்லையற்றதாகும். ஆகவே இதன் பொருளை எம்பெருமானார்க்கு முன்னே இருந்தவர்கள் மறைத்துக் கொண்டு, வெளியிடாமல் இருந்தனர். ஆனால் ஸம்ஸாரிகளின் துன்பமான நிலையை, கருணையே வடிவமான எம்பெருமானார் பார்த்தார். அவரால் நாம் படும் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. நமது துன்பத்தைக் கண்டு, நாம் பிழைக்கும்வழியாக, சரம ச்லோகத்தின் மேன்மையைப் பெரிதும் பாராட்டாமல் அனைவருக்கும் வெளியிட்டார்.

**வ்யாக்யானம் -** அப்படி உபதேசித்து விடுகிறமாத்ரமுமின்றிக்கே இவ்வர்த்தத்தை எல்லாரும் அறிந்து உஜ்ஜீவிக்க வேணுமென்னும் பரமக்ருபையாலேயிறே இது தன்னைப் பல ப்ரபந்தங்களிலும் ஸங்க்ரஹ விஸ்தரரூபேண இவர் அருளிச் செய்தது. மற்றுள்ள ப்ரபந்தங்கள் எல்லாவற்றிலும் போலன்றிக்கே ஸ்த்ரீ பாலர்களுக்கும் அதிகரிக்கலாம்படி தெளிய அருளிச்செய்தது இப்ரபந்தத்திலேயிறே.

**விளக்கம் -** எம்பெருமானார் உபதேசித்த அதே வழியில் ஸ்வாமி பிள்ளைலோகாசார்யாரும் உபதேசித்தார். தன்னுடைய எல்லையற்ற கருணை காரணமாக இந்த சரம ச்லோகத்தின் பொருளை அனைவரும் உணர வேண்டும் என்று எண்ணினார். ஆகவே இதன் பொருளைப் பல ப்ரபந்தங்களில் விரிவாகவும் சுருக்கமாகவும் அருளிச்செய்தார். மற்ற ப்ரபந்தங்கள் போன்று அல்லாமல் பெண்களும் குழந்தைகளும் கூட உணரும்படி இந்த ப்ரபந்தத்தில் அருளிச்செய்தார்.

## அவதாரிகை ஸம்பூர்ணம்

185. கீழே சில உபாய விசேஷங்களை உபதேசிக்க அவை துச்சகங்களென்றும், ஸ்வரூப விரோதிகளென்றும் நினைத்து சோகாவிஷ்டனான அர்ஜுநனைக் குறித்து அவனுடைய சோக நிவ்ருத்த்யர்த்தமாக “இனி இதுக்கு அவ்வருகில்லை” என்னும்படியான சரமோபாயத்தை அருளிச் செய்கையாலே, சரமச்லோகமென்று இதுக்குப் பேராயிருக்கிறது.

**அவதாரிகை -** இதில் ப்ரதமத்திலே இந்த ச்லோகார்த்தத்தினுடைய கௌரவத்தை எல்லாருடைய நெஞ்சிலும் படுத்துகைக்காக, இது தனக்குச் சரமச்லோகமென்று திருநாமமாகைக்கு ஹேதுவை அருளிச்செய்கிறார் - கீழே சில உபாய விசேஷங்களை - என்று தொடங்கி.

**விளக்கம் -** முதலில் சரமச்லோகத்தின் பொருளில் அடங்கி உள்ள முக்கியத்வத்தை அனைவரது உள்ளத்திலும் நிலை நிறுத்த எண்ணினார். ஆகவே சரமச்லோகம் என்ற திருநாமம் இதற்கு ஏன் வந்தது என்ற காரணத்தை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, இந்த ச்லோகத்துக்குக் கீழே அநேகாத்யாயங்களிலே கர்மஜ்ஞாநாதிகளான சில உபாய விசேஷங்களை ஸ்வப்ராப்தி லக்ஷண மோக்ஷ ஸாதநமாக விஸ்தரேண இந்த்ரியஜயம் அரிதாகையாலும், ஸாவதாநமாகச் சிரகாலம் ஸாதிக்க வேண்டியிருக்கையாலும் அவை அநுஷ்டிக்க அஸக்யங்களென்றும், ஸ்வசரீரத்வ கதநாதிகளாலே ப்ரதிபாதிக்கப்பட்ட பரதந்த்ரமான ஸ்வரூபத்துக்கு ஸ்வயத்ந ரூபங்களான இவை விரோதிகளென்றும் புத்தி பண்ணி, இவற்றாலே எம்பெருமானைப் பெற என்பது ஒன்றில்லை; இனி இழந்தே போமித்தனையாகாதே என்கிற சோகத்தாலே ஆவிஷ்டனான அர்ஜுநனைக் குறித்து, அவனுடைய அந்த சோகம் போகைக்காக, "ஸுசகத்வத்தாலும் ஸ்வரூபாநு ரூபதையாலும் இனி இதுக்கு மேலில்லை" என்னும்படியான சரமமான உபாயத்தை அருளிச்செய்கையாலே, சரமச்லோகமென்று இதுக்குத் திருநாமமாயிருக்கிறது - என்கை.

**விளக்கம் –** இந்த ச்லோகத்திற்கு முன்னால் உள்ள பல அத்யாயங்களில் தன்னையும் மோக்ஷத்தையும் அடையும் ஸாதனமாகக் கர்மயோகம், ஞானயோகம் முதலானவற்றைக் கண்ணன் விரிவாக உபதேசித்தான். ஆனால் அவை அனைத்தும் உடல் ரீதியாக மிகவும் சிரமப்பட்டு இயற்றப்படவேண்டும், புலன்களை அடக்குதல் அரிது, நீண்டகாலம் பிடிக்கும் முதலான காரணங்களால் அரிதானவை என்று அர்ஜுனன் உணர்ந்தான். அவை சுயமாக இயற்றப்பட வேண்டியவை என்பதால் ஈச்வரனுக்கு சரீரமாக உள்ள ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்காதவை என்று அறிந்து கொண்டான். ஆகவே தனது மனதில், "இவற்றின் மூலமாக எம்பெருமானை என்னால் அடையவே இயலாது. அவனை அடையாமல் நான் இருந்து விடுவேனோ?", என்று கவலையுடன் நின்றான். இப்படிப்பட்ட அர்ஜுனனின் துயரம் நீக்கும் வகையில், ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்றதாகவும், இதை விட எளிமையானது இல்லை என்பதாகவும் உள்ள இறுதியான உபாயத்தை அருளிச் செய்தான். இதனால்தான் இதற்கு சரமச்லோகம் என்று பெயர் வந்தது.

186. இதில் பூர்வார்த்தத்தாலே அதிகாரி க்ருத்யத்தை அருளிச்செய்கிறான்; உத்தரார்த்தத்தாலே உபாயக்ருத்யத்தை அருளிச்செய்கிறான்.

**அவதாரிகை -** இனி இச்லோகத்துக்கு வாக்யார்த்தம் அருளிச்செய்கிறார் - இதில் பூர்வார்த்தத்தாலே - என்று தொடங்கி.

**விளக்கம் -** இனி சரம ச்லோகத்தின் பொருளை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அர்த்தத்வயாத்மகமான இந்த ச்லோகத்தில் பூர்வார்த்தத்தாலே இவ்வுபாயத்துக்கு அதிகாரியானவன் செய்யும் அம்சத்தை அருளிச்செய்கிறான். உத்தரார்த்தத்தாலே உபாயபூதனான தான் இவருக்குச் செய்யும் அம்சத்தை அருளிச் செய்கிறான் – என்கை.

**விளக்கம் -** இந்த ச்லோகம் இரண்டு பகுதிகளைக் கொண்டது. இதன் முதல் பகுதியில் இந்த உபாயத்தைப் பின்பற்றக் கூடிய அதிகாரி என்ன செய்ய வேண்டும் என்று கூறுகிறான். இரண்டாவது பகுதியால், இந்த உபாயம் மூலம் இந்த அதிகாரிக்கு தான் (கண்ணன்) என்ன செய்யப் போவதாக கூறுகிறான்.

187. அதிகாரிக்கு க்ருத்யமாவது – உபாய பரிக்ரஹம்.

**அவதாரிகை -** அதிகாரிக்ருத்யமாவது எது என்ன அருளிச்செய்கிறார் - அதிகாரிக்கு க்ருத்யமாவது உபாயபரிக்ரஹம் – என்று.

**விளக்கம் -** அதிகாரி என்ன செய்யவேண்டும் என்ற் கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது அதிகாரியானவனுக்கு இங்குச் செய்யத்தக்கது இவ்வுபாயத்தை ஸ்வீகரிக்கை – என்கை.

**விளக்கம் -** அதிகாரியானவன் கண்ணன் கூறும் இந்த உபாயத்தை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

188. அத்தை ஸாங்கமாக விதிக்கிறான்.

**அவதாரிகை** - ஆனால் அவ்வளவை விதியாதே உபாயாந்தர பரித்யாகம் சொல்லுவானென் என்ன, அருளிச்செய்கிறார் - அத்தை ஸாங்கமாக விதிக்கிறான் – என்று.

**விளக்கம்** - பலவற்றைச் செய்ய வேண்டும் என்று விதிக்காமல், மற்ற உபாயங்களைத் தள்ள வேண்டும் என்று ஏன் கூறப்பட்டது என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, அந்த உபாய ஸ்வீகாரத்தை உபாயாந்தர பரித்யாகமாகிற அங்கத்தோடேகூட விதிக்கிறான் என்கை. ப்ரக்ஷாள்ய பாதா வாசாமேத் ஸ்நாத்வா விதி வதர்ச்சயேத் ஸ்தித்வார்க்யம் பாநவே தத்யாத் த்யாத்வா தேவம் ஜபேந்மநும் என்று ஆசமநாதிகளுக்கு அங்கமாகச் சொன்ன பாதப்ரக்ஷாளநதியொழிய அவை அநுஷ்டிக்கவொண்ணாதாற்போலே. இங்கும் ல்யபந்த பதத்தாலே அங்கமாகச் சொல்லுகிற உபாயந்தர த்யாகத்தையொழிய ஸ்வீகாரம் அநுபபந்நம் என்னுமிடம் ஸித்தமிறே. ஆகையால், "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய ஸ்திதச்சேத்" என்று துஷ்கரத்வ புத்தியாலே ஸ்வத: ப்ராப்தமான உபாயாந்தர பரித்யாகத்தை அநுவதித்து ஸித்தோபாய ஸ்வீகாரத்தை விதிக்கிறதென்கிற அநுவாதபக்ஷம் அயுக்தம் – என்றதாயிற்று.

**விளக்கம்** - மற்ற உபாயங்களைக் கைவிடுதல் என்பதே இந்த உபாயத்தின் வழி நடப்பதற்கு ஒரு விதியாக (ஓர் அங்கம்) உள்ளது. ப்ரக்ஷாள்ய பாதா வாசாமேத் ஸ்நாத்வா விதி வதர்ச்சயேத் ஸ்தித்வார்க்யம் பாநவே தத்யாத் த்யாத்வா தேவம் ஜபேந்மநும் – கால்களைக் கழுவிய பின்னர்தான் பூஜை செய்யவேண்டும்; சூர்யனுக்கு அர்க்யத்தை நின்று கொண்டுதான் விட வேண்டும்; கேசவனை மனதில் நிறுத்தியபடியேதான் மற்ற மந்திரங்களைக் கூறவேண்டும் - என்று உள்ளது. ஆக, ஆசமனம் முதலானவற்றைக் கால்களைக் கழுவுதல் போன்ற அதன் விதிகளைக் கடைப்பிடிக்காமல் செய்ய இயலாது. அது போன்றே இங்கும், மற்றவற்றைக் கைவிடுதல் என்பது இல்லாமல் இந்த உபாயத்தை ஏற்க இயலாது என்றாகிறது. ஆக ஸர்வதர்மாந் பரித்யஜ்ய - அனைத்தையும் கைவிட்டு – என்று கூறும்போது, மற்ற தர்மங்களைக் கடைப்பிடிப்பதில் உள்ள சிரமம் அர்ஜுனனுக்கு உள்ளது என்பதை உணர்த்தி, அதன் பின்னரே ஸித்தோபாயத்தைக் கண்ணன் கூறுகிறான் - என்னும் இந்த வாதம் தள்ளப்படுகிறது.

ஸ்ரீபிள்ளை லோகாசார்யார் திருவடிகளே சரணம்
ஸ்ரீமணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# திருக்குறுந்தாண்டகம்

(பாகம் - 5)

10. சித்தமும் செவ்வை நில்லாது என்செய்கேன் தீவினையேன்
பத்திமைக்கு அன்புடையேன் ஆவதே பணியாய் எந்தாய்
முத்து ஒளி மரகதமே முழங்கு ஒளி முகில் வண்ணா என்
அத்த நின் அடிமை அல்லால் யாதும் ஒன்று அறிகிலேனே.

**பொருள்** - உன்னை நினைக்கும்போது எனது மனம் உன்னிடம் நிலையாக நிற்பதில்லை. இப்படியாக உன்னை அனுபவிக்க இயலாத பாவத்தைச் செய்த அடியேன் என்ன செய்வது? உன்னிடம் எனக்கு உள்ள அளவு கடந்த பக்தியைக் கொண்டு, உன் மீது மிகுந்த அன்புடையவனாகும்படி நீயே செய்ய வேண்டும். என்னுடைய ஸ்வாமியே! முத்தின் ஒளியும், மரகதத்தின் நிறமும் கொண்ட திருமேனி உடையவனே! இடி முழக்கத்துடன் கூடிய மேகத்தைப் போன்ற நிறம் கொண்டவனே! என்னுடைய தலைவனே! உனது கைங்கர்யத்தைத் தவிர வேறு எதனையும் நான் அறியாமல் உள்ளேன்.

**அவதாரிகை** – ஸம்ஸாரத்தை அஞ்சி உன் திருவடிகளைப் பற்றினவளவேயோ? திருவடிகளிலே பரமபக்தியுமுண்டாயிற்று என்கிறார்.

**விளக்கம்** – இந்த ஸம்ஸாரத்திற்குப் பயந்து உனது திருவடிகளை நான் பற்றவில்லை. உனது திருவடிகளின் மீது பரமபக்தி உண்டாகிறது என்று கூறுகிறார்.

**வ்யாக்யானம்** - (சித்தமும் செவ்வை நில்லாது) - நீஞ்சப்புக்கு வாய்கரையிலே தெப்பமிழப்பாரைபோலே அநுஸந்திக்கப் புக்கால் தரித்து நிற்கமாட்டுகிறதில்லை நெஞ்சு. (என்செய்கேன் தீவினையேன்) - பக்திபரவச்யத்தாலே அநுபவிக்கப் போகாதபடி பாபத்தைப் பண்ணினேன். என்செய்கேனென்று – செயல்மாட்சி; உத்தேச்ய விரோதி பாபமாபத்தைப் பற்ற (தீவினையேன்) - என்கிறார்.

(பத்திமைக்கு அன்புடையேனாவதே பணியாயெந்தாய்) – "என்றனளவன்றால் யானுடைய அன்பு" என்னும்படியே நூற்பிடித்த பக்தியை அளவாக்கவேணும். (எந்தாய்) - பக்தியை உண்டாக்கின நீயே அளவுபடுத்த வேணும்.

**விளக்கம் -** (சித்தமும் செவ்வை நில்லாது) – நீந்தத் தெரியாத ஒருவன் ஆற்றைக் கடக்க ஒரு படகைப் பயன்படுத்தும் போது, நடுவழியில் அந்தப் படகை இழந்து நிற்பது போல், உன்னைப் பற்றி எண்ணத் தொடங்கும்போது எனது உள்ளமானது நிலைத்து நிற்காமல் உள்ளது. (என்செய்கேன் தீவினையேன்) – மிகுந்த பக்தி கொண்டு உன்னை அநுபவிக்க இயலாதபடி பாவத்தைச் செய்தேன். "என் செய்கேன்" என்ற பதங்கள், ஆழ்வார் செயலற்று இருப்பதைக் கூறுகிறது. மிகுந்த பக்தியுடன் இருத்தல் உயர்வானதாக இருந்தாலும், தடை ஏற்படுவதால் "தீவினையேன்" என்று கூறிக் கொள்கிறார். (பத்திமைக்கு அன்புடையேனாவதே பணியாயெந்தாய்) - இரண்டாம் திருவந்தாதி (100) - எந்தன் அளவன்றால் யானுடைய அன்பு – என்னும்படி பிரிய நேரிட்டால் தாங்க இயலாத அளவு இருக்கின்ற பக்தியாகச் செய்யவேண்டும். (எந்தாய்) - பக்தி ஏற்படுத்திய நீயே அதனை அளவுபடுத்த வேண்டும்.

**வ்யாக்யானம் –** (முத்தொளி மரகதமே) - பக்திஜநகமான வடிவு முத்தினுடைய குளிர்த்தியையும், மரதகதத்தினுடைய ச்யாமதையையுமுடைத்தாயிருக்கை. (முழங்கொளி முகில் வண்ணா) - மின்னி முழங்கி வில்லிட்டு ஸஞ்சரிப்பதொரு மேகம் போன்ற நிறத்தையுடையவனே. (என் அத்த) – அழகுக்குத் தோற்று என்னாயனென்கிறார். "நீர் சித்தமுஞ்செவ்வைநில்லாது என்பது தீவினையேன் என்பதாய்க் கிடந்து என்றியபடுகிறீர்? இத்தைவிட்டு வேறோன்றோடே போதுபோக்கினாலோ?" என்ன. (நின்னடிமை இத்யாதி) - உன் திருவடிகளில் கைங்கர்யமொழிய வேறொன்றறியேன். "மறந்தேனுன்னை முன்னம்" என்றது போக்கி, "ஏது செய்தால் மறக்கேன்" என்னும்படி பண்ணி வைத்த பின்பு வேறொன்றை அறிய விரகுண்டோ?

**விளக்கம் –** (முத்தொளி மரகதமே) - பக்தி ஏற்படுத்திய எம்பெருமானின் திருமேனியானது முத்தின் குளிர்ச்சி, மரகதத்தின் நீல நிறம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும். (முழங்கொளி) – இடி முழக்கத்துடனும், வான வில்லுடனும் உலவுகின்ற மேகம் போன்ற நிறத்தை உடையவனே. (என் அத்த) – அவனது திருமேனியின் அழகுக்குத் தோற்றுப் போய், "எனது தலைவனே", என்று

கூறுகிறார். எம்பொருமான் இவரிடம், ”சித்தமும் செவ்வை நில்லாது என்று ஏன் தவிக்க வேண்டும்? என்னை விட்டு வேறு ஒரு விஷயத்தின் பின்னே சென்று விடலாமே?”, என்றான். இதற்கு ஆழ்வார் (நின் அடிமை) - உன்னுடைய திருவடிகளில் செய்கின்ற கைங்கர்யம் அல்லாது வேறு எதனையும் நான் அறியேன். பெரிய திருமொழி (6-2-2) – மறந்தேன் உன்னை முன்னம் – என்று கூறுவது போன்று, எல்லையற்ற காலம் எம்பெருமானை மறந்திருந்த நிலை மாறி, பெரிய திருமொழி (9-3-3) –ஏது செய்தால் மறக்கேன் - என்பதற்கு ஏற்ப, உன்னை எப்போதும் மறக்காதபடி நீயே செய்த பின்னர், உன்னை மறக்கின்ற உபாயம் ஏதேனும் உண்டோ?

11. தொண்டு எல்லாம் பரவி நின்னைத் தொழுதபடி பணியுமாறு
கண்டுதான் கவலை தீர்ப்பானாவதே பணியாய் எந்தாய்
அண்டமாய் எண்டிசைக்கும் ஆதியாய் நீதியான
பண்டமாம் பரம சோதி நின்னையே பரவுவேனே.

**பொருள்** – செய்கின்ற கைங்கர்யம் அனைத்தையும் பேசி, உன்னைத் தொழுது, உனது திருவடிகளில் வணங்கி நிற்கின்ற மார்க்கத்தை வேண்டி நின்று, தன்னுடைய துன்பத்தை தானாகவே ஒருவன் போக்க இயலுமா? என் ஸ்வாமியே! நீயே அருள வேண்டும். அனைத்து அண்டத்திலும் அந்தர்யாமியாக, எட்டுத் திசைக்கும் காரணமானவனாக, முறை தவறாத செல்வமாக உள்ள உயர்ந்த சோதியான உன்னை நான் முறையில்லாமல் துதிப்பேன்.

**வ்யாக்யானம்** - (தொண்டெல்லாமித்யாதி) - செய்யுமடிமையெல்லாம் அடைவு கெட்டுப் பேசி. அஹம் ஸர்வம் கரிஷ்யாமி என்னும்படியே. (நின்னைத் தொழுது) – உன்னைக் கண்டு வைத்து அடைவுபடத் தொழப்போமோ? (அடிபணியுமாறு கண்டு) - தப்பாமே மநோரதித்து. (தான் கவலை தீர்ப்பானாவதே) - தன்னாலே மநோதுக்கத்தைத் தீர்த்துக் கொள்ளலாமே? என்னாலே மனக்கவலை போக்கி அடிமை செய்யப்போமோ? மனக்கவலை தீர்ப்பார் அவரிறே. (பணியாயெந்தாய்) - நிர்வாஹகனான நீயே அருளிச்செய்யாய்.

**விளக்கம்** - (தொண்டெல்லாம்) – செய்கின்ற தொண்டுகளை முறை இல்லாமல் பேசி. இராமாயணம் – அஹம் ஸர்வம் கரிஷ்யாமி – அனைத்து அடிமைத்தனங்களையும் – என்று கூறுவது போல் பேசி. (நின்னைத் தொழுது) – உன்னை வணங்கி, முறையில்லாமல் பேசி, அதாவது உனது திருமேனியைக் கண்டவுடன் இதயம் உடைந்ததால் எவ்விதம் முறையுடன் வணங்க இயலும் என்று

கருத்து. (அடி பணியும்) – திருவடிகளில் வணங்குவதை மனதால் கண்டு. (தான் கவலை தீர்ப்பானாவதே) - தன்னாலேயே மனத்துன்பத்தைப் போக்கிக் கொள்ள இயலுமா? எனது மனத்துன்பத்தை என்னாலேயே, நானே நீக்கிக் கொண்டு, உனக்கு அடிமை செய்ய இயலுமா? மனக்கவலை தீர்ப்பவன் அவன் அல்லவா? (பணியாய் எந்தாய்) - அனைத்தையும் நிர்வாகம் செய்யும் நீயே இக்கேள்விகளுக்கும் விடை அருளிச்செய்ய வேண்டும்.

**வ்யாக்யானம்** - (அண்டமாயித்யாதி) - அண்டாந்தர்வர்த்திகளுக்கும் நிர்வாஹகனாய், எட்டுத் திக்கிலுள்ள தேவதைகளுக்கும் காரணமாய், முறைதப்பாதபடி. (பண்டமாம்) – தநமாம். பண்டமென்பது – தநம். இவ்வாத்மாவுக்கு தநமானவனே. (பரமசோதி) - பரஞ்ஜ்யோதிஸ் சப்தவாச்யனானவனே. (நின்னையே பரவுவேனே) - உன்னையே அடைவுகெட ஸ்தோத்ரம் பண்ணுமத்தனை.

**விளக்கம்** – (அண்டமாய்) – அண்டத்தில் உள்ள அனைத்தையும் நிர்வாகம் செய்பவனாய், எட்டுத் திசைகளில் உள்ள தேவதைகளுக்குக் காரணமாக உள்ளவனாய், நீதி தவறாதவனாய். (பண்டமாம்) – பண்டம் என்றால் செல்வம் என்று பொருள். இந்த ஆத்மாவுக்கு ஏற்ற செல்வமாக உள்ளவனே. (பரமசோதி) - வேதங்களால் பரம்சோதி என்று துதிக்கப்படுபவனே. (நின்னையே பரவுவனே) - உன்னையே முறை தவறி நான் துதிப்பேன்.

12. ஆவியை அரங்க மாலை அழுக்கு உடம்பு எச்சில் வாயால்
தூய்மையில் தொண்டனேன் நான் சொல்லினேன் தொல்லை நாமம்
பாவியேன் பிழைத்தவாறு என்று அஞ்சினேற்கு அஞ்சல் என்று
காவிபோல் வண்ணர் வந்து என் கண்ணுளே தோன்றினாரே.

பொருள் - அனைத்து உயிர்களுக்கும் உயிராக உள்ளவனும், அன்பே திருமேனியாக உள்ளவனும் ஆகிய பெரியபெருமாள் திருவரங்கத்தில் சயனித்துள்ளான். அழுக்கு உடல் கொண்டு, எச்சில் மிகுந்த வாய் கொண்டு, தூய்மையே இல்லாமல் உலக விஷயங்களுக்கே அடிமையாக இருந்த நான் – எல்லையற்ற காலமாகப் போற்றப்படும் அவனது திருநாமத்தைக் கொண்டு அவனை அழைத்து விட்டேனே! பாவியான நான் எத்தனை பெரிய பாவம் செய்து விட்டேன் என்று அச்சத்துடன் நின்றேன். அப்போது என் அருகில் வந்து, கருங்குவளை மலர் போன்ற நிறம் கொண்ட திருவரங்கன், “அச்சம் கொள்ளாதே”, என்று கூறி என் கண்ணுள்ளே நிலைத்து நின்றான்.

**அவதாரிகை** – "உபயவிபூதியையும் அழிக்கப்புக்கேன்" என்கிறார்.

**விளக்கம்** - அவனைப் பற்றிப் பேசத் தொடங்கி, அவனது இரண்டு விபூதிகளையும் அழிக்கத் தொடங்கியதாகப் புலம்புகிறார்.

**வ்யாக்யானம்** - (ஆவியை) – உலகங்கட்கெல்லாமோருயிரானவனை. (அரங்கமாலை) - கண்ணுக்குத் தோற்றாதபடி நின்று தாரகமாகையன்றிக்கே, கண்ணாலே காண வ்யாமோஹந்தான் ஒருவடிவென்னலாம்படியிருக்கை. (அழுக்குடம் பெச்சில் வாயால்) – எத்தனை பேர் காலிலே விழுந்தது? எத்தனை பேரை ஸ்தோத்ரம் பண்ணிற்று? (தூய்மையில் நான்) – தப்பச்செய்தோம் என்கிற அநுதாபமுமில்லாத நான். (தொண்டனேன் நான்) - கண்டதெல்லாவற்றிலும் தொண்டுபட்டுத் திரிந்த நான். (சொல்லினேன் தொல்லைநாமம்) - நித்யஸூரிகள் இனி என் கொண்டு ஜீவிக்கக் கடவர்கள்? சொல்லியற்றது. இதுக்கு முன்பு அழிந்தறியாததொன்று நமோ நாராயணாயவென்று பல்லாண்டு பாடி ஜீவிக்கக் கடவர்கள் இனி என் கொண்டு ஜீவிக்கக் கடவர்கள்?

**விளக்கம்** – (ஆவியை) – திருவாய்மொழி (8-1-5) உலகங்கட்கு எல்லாம் ஓருயிரானை என்னும்படி, அனைத்திற்கும் உயிராக உள்ளவனை. (அரங்கமாலை) – கண்ணுக்குத் தெரியாதபடி நிற்கின்ற பரவாஸுதேவன் போன்று அல்லாமல், கண்ணால் காணும்படி, அன்பே ஒரு வடிவம் எடுத்ததோ என்று கூறும்படி நிற்கின்றவனை. (அழுக்கு) – இந்த உடல் எத்தனை மனிதர்களின் கால்களில் விழுந்து அழுக்கு அடைந்தது? எத்தனை மனிதர்களை பொய்யாகத் துதித்து வாய் எச்சில் அடைந்தது? (தூய்மையில்) – தவறு செய்து விட்டோம் என்ற சிந்தனை சிறிதும் இல்லாத நான். (தொண்டனேன்) – கண்ணில்பட்ட அனைவருக்கும் அடிமைத்தனம் செய்து திரிந்த நான். (சொல்லினேன்) - "ஸ்ரீரங்கநாதா" என்று அவனது திருநாமத்தைச் சொல்லி, நான் அழித்து விட்டேனே. இதுவரை அழியாமல் இருந்த அவனது திருநாமம், எனது வாயில் புகுந்து, அழிந்து விட்டதே! இனி நித்யசூரிகள் எந்தத் திருநாமத்தைக் கூறிப் பிழைப்பார்கள்? நமோ நாராயணாய என்று அவனுக்குத் திருப்பல்லாண்டு பாடுவதால் மட்டுமே உயிர் வாழ்பவர்கள், இனி எதனைக் கொண்டு வாழ்வார்கள்?

**வ்யாக்யானம்** - (பாவியேன் பிழைத்தவாறென்றஞ்சினேற்கு) - தொல்லை நாமத்தை நான் சொல்லி விடுகையன்றிக்கே, "நானும் சொன்னேன் நமருமுரைமின்" என்று இப்படி அழிப்பாருண்டோ? ஸாத்விகனாயிருப்பானொருவன் ரஜஸ்ஸு தலையெடுத்து மத்ய ராத்ரத்திலே க்ருஹத்திலே நெருப்பை வைத்து, ஸத்வம் தலையெடுத்தவாறே அநுதபிக்குமாபோலே, பாவியேன் நான் தப்பினேனென்று

அஞ்சினேனுக்கு. (அஞ்சலென்று) - உன் கார்யம் உனக்கே பரமோவென்று, மாசுச: என்று அஞ்சாதே யென்று, (காவிபோல் வண்ணர் வந்து) - வடிவழகைக் காட்டி மருந்தையிட்டுப் பொருந்தவிட்டார். (காவி) – கருங்குவளை. இவ்வடிவை நம் கண்ணாலே நோக்கி அழிக்கவெண்ணாதென்று கண்ணைச் செம்பளித்தேன். (கண்ணுள்ளே தோன்றினாரே) - கண்ணுள்ளே தோன்றினார். இவர் கண் செம்பளித்துப் பார்க்கிறதெப்போதோ என்று பார்த்திருந்தான் போலே காணும் அவனும்.

**விளக்கம் -** (பாவியேன்) - பழமையான திருநாமத்தை நான் கூறியது மட்டும் அல்லாமல், பெரிய திருமொழி (6-10-6) நானும் சொன்னேன் நமருமுரைமின் – என்று மற்றவர்களையும் கூற வைத்து அழித்தேனே! ஸத்வ குணம் நிரம்பிய ஒருவன், ரஜோ குணம் தலை எடுக்கும்போது வேறு ஒருவனது வீட்டிற்குத் தீ வைத்து விடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். அதன் பின்னர் ஸத்வ குணம் ஓங்கும்போது, "தவறு செய்து விட்டேன்", என்று வருந்துவது போன்று நான் அச்சத்துடன் நின்றேன். (அஞ்சல்) - கீதையில் மாசுச: - அச்சம் கொள்ளாதே, நீ செய்யும் செயல் உன்னுடையது அல்ல - என்று கண்ணன் கூறியது போல் அரங்கனும் வந்து கூறினான். (காவிபோல் வண்ணர் வந்து) – "உனது சொல்லால் எனக்கு ஏதும் நேரவில்லை", என்று கூறித் தனது திருமேனியை எனக்குக் காண்பித்து, என்னுடைய கவலைக்கு மருந்தை இட்டான். (காவி) – காவி என்றால் கருங்குவளை. இப்படியாக உள்ள இவனது திருமேனியை நாம் கண்ணால் கண்டு அழித்து விடக்கூடாது என்று எண்ணி எனது கண்களை மூடிக்கொண்டேன். (கண்ணுள்ளே தோன்றினாரே) - அவன் அப்போதும் என்னை விடாமல், மூடிய எனது கண்ணுக்குள்ளே தோன்றினான். அவன் மனதில், "இவன் எப்போது கண்களை மூடுவான், நாம் இவனது கண்ணிற்குள் சென்று நிற்போம்", என்று எண்ணி எதிர்பார்த்து நிற்பவன் போலே இருந்தான்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச் செய்த

# திருமாலை

(பகுதி – 21)

**வ்யாக்யானம் –** (அருள் தன்னாலே காட்டினான் திருவரங்கம்) – சிலர் எங்களுக்குக் காட்டவேணுமென்னக் காட்டுகையன்றிக்கே, முலைக்கடுப்புத் தீரத் தரையிலே பீச்சுவாரைப்போலே தன் செல்லாமையாலே காட்டினானாய்த்து. இருந்த கிழிச்சீரையோடே ரத்நத்தைக் கொடுப்பாரைப்போலே கோயிலேடே கூடவாய்த்து தன்னைக் காட்டிக் கொடுத்தது. இவர்களோடு, இவர்கள் ஆச்ரயிக்கிற தேவதைகளோடு வாசியறத் தந்தாம் நிலையையுணர்ந்து, ரக்ஷகாபேக்ஷையுண்டானவன்று நாமறியோமாக வொண்ணாதென்று ரக்ஷகனான தான் தன்னை ஸந்நிஹிதனாக்கி வைத்தான்.

**விளக்கம் –** ஒரு சிலர் பெரியபெருமாளிடம், “உன்னை எங்களுக்குக் காண்பிப்பாயாக”, என்று விண்ணப்பம் கூடச் செய்யவில்லை. தாயானவள் தனது ஸ்தனபாரம் நீங்கப் பாலைத் தரையில் பீய்ச்சுவதைப் போன்று, இவன் தன்னை மற்றவர்களுக்குக் காண்பித்துக் கொடுக்கவில்லை என்றால் தாங்காதவன் போல தன்னைக் காட்டினான். உயர்ந்த இரத்தினக்கற்களை, அவை உள்ள மூட்டையுடன் காண்பித்துக் கொடுப்பது போன்று, பெரியகோயிலுடன் சேர்த்துத் தன்னைக் காண்பித்துக் கொடுத்தான். ஜீவன்களும், ஜீவன்களால் ஆராதிக்கப்படும் தேவதைகளும் தங்களது நிலையை உணர்ந்து, தங்களைக் காப்பாற்றும் ஒரே ரக்ஷகன் யார் என்று அறிய முனைந்தனர். அப்போது, தானே ரக்ஷகன் என்று இவர்கள் அறியாமல் தடுமாறக் கூடாது என்று எண்ணியதால், தன்னைக் காண்பித்துக் கொடுக்கும் வகையில் திருவரங்கத்தில் சயனித்தான்.

**வ்யாக்யானம் –** இதுதான் ஆர்க்கென்னில் (உய்பவர்க்கு) உஜ்ஜீவிப்போமென்பா ரெல்லார்க்கும் ஒக்கும் இது; இவன் நிழலில் ஒதுங்கோமென்னாமையே வேண்டுவது; இது உஜ்ஜீவநமானவோபாதி தேவதாந்தரபஜநமும் பந்தகமாகையாலே ஸம்ஸாரஹேது என்கை. (உய்யும் வண்ணம்) – தேவதாந்தரமுகமாக தச்சரீரியை ஆராதிக்கையும் உஜ்ஜீவந ப்ரகாரமானாலும் அது அதிக்ருதாதிகாரம்; கோயிலை வந்து ஆச்ரயித்து உஜ்ஜீவிக்கை ஸர்வாதிகாரம்.

**விளக்கம்** – இப்படியாக இவன் தன்னை யாருக்குக் காண்பித்தபடி உள்ளான்? (உய்பவர்க்கு) – “கரையேற வேண்டும்”, என்று எண்ணுபவர்கள் அனைவருக்காகவும் தன்னைக் காண்பித்துக் கொடுத்தான். ”இவனது நிழலில் கூட நாங்கள் ஒதுங்க மாட்டோம்”, என்று விலகிச் செல்லாமல் இருந்தாலே போதுமானது. இவனே பிழைக்கும் வழி என்பதால், மற்ற தேவதைகளை ஆராதிப்பது என்பது பந்தப்படுத்திவிடும் என்பதும், அவை ஸம்ஸாரத்தில் சிக்கவைக்கும் காரணம் என்பதும் விளங்கும். (உய்யும் வண்ணம்) – மற்ற தேவதைகளின் அந்தர்யாமியாக உள்ள எம்பெருமானை ஆராதித்தல் என்ற எண்ணம் கொண்டு அந்தத் தேவதைகளை ஆராதித்தல் என்பது சரியான உபாயம் என்றாலும், இந்த வழியானது மூன்று வர்ணத்தினர்களுக்கு மட்டுமே பொருந்தும். ஆகா அனைவரும் வந்து கரையேறும் இடம் எது என்றால் திருவரங்கமே ஆகும்.

**வ்யாக்யானம் –** (கேட்டிரே நம்பிமீர்காள்) – பகவத் வ்யதிரிக்த விஷய லாபத்தாலே பூர்ணராயிருந்துள்ள நீங்கள் இவ்வர்த்தத்தைக் கேட்டிகோளே என்கிறார். ஸர்வேச்வரன் ஸந்நிஹிதனாயிருக்க தேவதாந்தரங்களை ஆச்ரயித்து, அத்தாலே பூர்ணராயிருந்துள்ள நீங்கள் கேட்டிகோளே என்றுமாம். ஸம்ஸாரிகள் ஆனைக்குப்பு ஆடுவாரைப்போலே இருக்கையாலே உணர்த்தி கேட்டிரே என்கிறார்.

**விளக்கம்** – (கேட்டிரே நம்பிமீர்காள்) – “எம்பெருமானைத் தவிர மற்ற விஷயங்களைப் பற்றிக் கிடந்து, அவை மூலமே உங்களுக்கு அனைத்தும் கிட்டியது என்ற எண்ணம் கொண்டவர்களே! நான் கூறும் ஆழ்பொருளை இப்போதாவது கேட்கிறீர்களா?”, என்கிறார். அல்லது, “ஸர்வேச்வரனாகிய ஸ்ரீரங்கநாதன் அருகில் உள்ளபோது, மற்ற தேவதைகளை ஆராதனை செய்து, அவற்றால் அனைத்தும் கிட்டியதாக எண்ணுபவர்களே, கேளுங்கள்”, என்றும் கொள்ளலாம். சதுரங்கம் விளையாடுபவர்கள் போன்று, ஸம்ஸாரிகள் மற்ற தேவதைகளை விடுத்து வேறு எதிலும் கவனம் செலுத்தாமல் உள்ளதால் “கேட்டிரே”, என்று அழைக்கிறார்.

**வ்யாக்யானம்** – (கெருடவாகனனும் நிற்க) – கருடவாஹனனிறே ஆச்ரயணீயன். பெரியதிருவடி கழுத்திலே நற்றரிக்கவிருத்தல், திருவாழியைச் சலியாதே பிடித்தல், ஸாக்ஷால்லக்ஷ்மியை எனக்கென்னுதல் செய்யும் இவற்றிலே ஒன்றே அமையுமிறே ஸர்வேச்வரனாகைக்கு. தன் பக்கல் ஆசாலேசமுடையார் இருந்தவிடத்தே கொடுவந்து காட்டும் பரிகரத்தையுடையவன் நிற்க. “நிற்க” என்கிறது, ஆசயா யதிவா ராம: என்கிறபடியே அவஸரப்ரதீக்ஷனாய் நிற்கை. தேவதாந்தரங்கள் பக்கல் போமிடத்தில் இவனை அதிக்ரமித்துப் போகவேண்டும்படி இவனுடைய ப்ரத்யாஸத்தியைச் சொல்லிற்றாகவுமாம்.

**விளக்கம்** – (கெருடவாகனனும் நிற்க) – அண்டத்தகுந்த பரம்பொருள் கருடனைத் தனது வாகனமாகக் கொண்டவன் ஆவான். கருடனின் கழுத்திலே வீரத்துடன் அமர்ந்திருத்தல், சக்கராயுதத்தை சலிப்படையாமல் ஏந்தியபடி இருத்தல், அனைத்து ஐச்வர்யங்களுக்கும் தேவதையான மஹாலக்ஷ்மிக்கு நாயகனாக இருத்தல் ஆகிய மூன்றும், "இவனே ஸர்வேச்வரன்", என்று உணர்த்துவதாகும். தன்னிடம் மிகவும் சிறிய அன்பு கொண்டிருந்தாலே போதுமானது, அவர்களிடம் தன்னைக் கொண்டு வந்து நிறுத்துகின்ற வாகனமான கருடனைக் கொண்டவன். இப்படிப்பட்டவன் உங்கள் முன்பு நிற்கும்போது. "நிற்க" என்றால் இராமாயணம் – ஆசயா யதிவா ராம: - இராமன் எப்போது அழைப்பானோ – என்று கூறும்படி, "தன்னை யாரும் அழைப்பார்களோ", என்று பெரியபெருமாள் காத்துக் கிடக்கிறான் என்று கருத்து. மற்ற தேவதைகளை நாடிச் செல்பவர்கள் இவனைக் கடந்தே செல்லவேண்டும்படியாக, இவன் மிகவும் அருகில் உள்ளான் என்றும் கூறலாம்.

**வ்யாக்யானம்** – (சேட்டைதன் மடியகத்துச் செல்வம் பார்த்திருக்கின்றீரே) – அஸ்ரீ கிழிச்சீரையிலே தநம் வாங்க இருக்கிறிகோள். அலக்ஷ்மீ பக்கலிலே ஐச்வர்யத்தை ஆகாங்க்ஷித்திருக்கிறிகோள். இதர தேவதைகளை ஆச்ரயித்து மோக்ஷம் பெறவிருக்கையாகிற இது அஸ்ரீ பக்கலிலே ஐச்வர்யம் வேண்டியிருக்கையிறே. பந்தகமாய் க்ஷுத்ரமான பலங்களைத் தரும் தேவதைகளை ஆச்ரயித்து, அபுநராவ்ருத்தி லக்ஷண மோக்ஷத்தை லபிக்கப்போமோ? அமணனைக் கூறைவேண்டுகிறது கொலையைக் கருதியிறே. அப்படியே இவர்கள் மதிப்பை அறுக்கையிறே. ரஜஸ்தம:ப்ரசுரரை ஆச்ரயித்து நித்யஸத்வஸ்தர் பெறும் பேற்றை எங்ஙனே பெறும்படி? பகவத்ப்ரவணரானவர்கள் தேவதாந்தரங்களை த்ருணீகரித்திறே இருப்பது. ருத்ரனும் தேவியும் போகாநிற்க, பகவத் ப்ரவணராயிருப்பாரொருவர் அவர்களை அநாதரித்துத் தன் வஸ்த்ரத்தைக் குத்தி நின்றத்தை நினைப்பது.

**விளக்கம்** – (சேட்டைதன் மடியகத்துச் செல்வம் பார்த்திருக்கின்றீரே) – மூதேவியிடமிருந்து பணமூட்டை பெறலாம் என்று எண்ணுகிறீர்களே! அலக்ஷ்மியிடம் ஐச்வர்யத்தை விரும்பி நிற்கிறீர்களே! மூதேவியிடம் செல்வம் பெறலாம் என்று எண்ணுதல், மற்ற தேவதைகளை மூலமாக மோக்ஷம் பெற்றுவிடலாம் என்று எண்ணுவது போன்றதாகும். ஸம்ஸாரத்தில் பந்தப்படுத்தவல்ல மற்ற தேவதைகளை ஆராதனை செய்து, மீண்டும் திரும்புதல் என்பதே இல்லாத மோக்ஷத்தைப் பெற இயலுமோ? வஸ்த்ரமே இல்லாமல் அம்மணமாகத் திரிகின்ற ஒருவனிடம், "வஸ்த்ரம் கொடு", என்று யாசிப்பது, அவனைக் கொல்வது போன்றதாகும். இது போன்று மற்ற தேவதைகளைடம் மோக்ஷத்தை வேண்டுதல் என்பது அவர்களின் மதிப்பை அழிப்பது போன்றதாகும். ஸத்வகுணத்தில் மட்டுமே நிலைநிற்பவர்கள் அடையும் மோக்ஷத்தை, ரஜ-தமஸ் குணங்கள் கொண்ட தேவதைகளை ஆராதனை செய்து எவ்விதம் பெற முடியும்?

எம்பெருமானிடம் மட்டுமே ஈடுபாடு கொண்டவர்கள் மற்ற தேவதைகளை மதிக்கமாட்டார்கள். ருத்ரனும், பார்வதியும் ஆகாய மார்க்கமாகச் சென்றபோது, அவர்களைக் கண்டுகொள்ளாமல், தனது கிழிந்த வஸ்த்ரத்தைத் திருமழிசையாழ்வார் தைத்துக் கொண்டிருந்த ஸம்பவம் இங்கே சிந்திக்கத்தக்கது.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்